**கவனிக்க.**- *2023.12.22 ஆந் திகதிய 2364 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2365 - 2023 දෙසැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2023.12.29**

*2365 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 02 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2024, சனவரி மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82528 - 5,403(2024/12)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## குளியாப்பிட்டிய பிரதேச சபை

களியாட்ட வரி விதித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரிச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள களியாட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறவிடப்படுகின்ற பிரவேசக் கட்டணத்தில் 10% ஐ களியாட்ட வரியாக விதித்து அறவிட 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகளுக்கு அமைய குளியாப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளரினால் 2023.05.24 ஆம் திகதிய 2023/540 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் . வடமேல் மாகாண ஆளுநராகிய லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய என் மீது சுமத்தப்பட்டிருக்கும் தத்துவங்களுக்கு ஏற்ப அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,
வடமேல் மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
*2023*, நவெம்பர் *28*.

***தீர்மானம்***

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9.3 ஆவது உப பிரிவின் மூலம் கூறப்பட்டுள்ள 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க களியாட்ட வரி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் குளியாப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளரான எஸ்.எம்.என். கே.குணதிலக்க ஆகிய என் மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப குளியாப்பிட்டிய பிரதேச சபையின் நியாயாதிக்கத்தினுள் உள்ள பிரதேசத்தினுள் நடாத்தப்படும் குறித்த கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள யாதாயினும் களியாட்ட நடவடிக்கைக்கான உட்பிரவேசம் தொடர்பாக வழங்கப்படுகின்ற கொடுப்பனவில் 10% க்கு சமமான தொகையை களியாட்ட வரியாக விதித்து அறவிடப்படல் வேண்டும் எனவும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்தின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கவும் இந்த தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் மாதத்திற்கு அடுத்து வருகின்ற மாதத்தின் முதலாம் திகதி முதல் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் நான் தீர்மானிக்கிறேன்.*

*12 - 726*